புரட்சிப்
# பெரியார் முழக்கம்



www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • மே (May) 07, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 19 • விலை(PRICE) ரூ.6.00

# தேர்தல் முடிவுகள் உணர்த்துவது என்ன?

*தேர்தல் முடிவுகள் எதிர்பாராதவை என்றே சொல்ல வேண்டும். எவ்வித அரசியல் அனுபவமோ, பயிற்சியோ இல்லாத நடிகர் விஜய் ஒரு கட்சியைத் தொடங்கி இரண்டே ஆண்டுகளில் நேரடியாக முதலமைச்சர் பதவியில் அமரப் போகிறார். இதற்கு தமிழ்நாட்டு வாக்காளர்கள் பெருமளவுக்கு ஆதரவு வழங்கியுள்ளார்கள்.*

*75 ஆண்டுகால வரலாறு கொண்ட திமுக வெற்றி வாய்ப்பை இழந்திருக்கிறது. முதல் தலைமுறை வாக்காளர்கள் பெருமளவு நடிகர் விஜய்க்கு வாக்குகளைக் குவித்துள்ளார்கள். நடிகர் விஜய் மக்களிடம் முன்வைத்த ஒரே கொள்கை "திமுக தீய சக்தி" என்பது மட்டுமே! இது தவிர தனது கொள்கை இதுதான் என்று ஒரு வார்த்தையைக் கூட அவர் உச்சரிக்கவில்லை. 'மாற்றம் வேண்டும்' என்ற ஒரே கொள்கைக்காக வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர். எதை நோக்கிய மாற்றம் என்பது குறித்த புரிதலோ, தெளிவோ வாக்காளர்களுக்கும் இல்லை; அந்த கட்சிக்கும் இல்லை.*

*தமிழ்நாடு வரலாற்றில் கடந்த ஐந்து ஆண்டுகள் நடந்த திராவிட மாடல் ஆட்சி அடுக்கடுக்கான சாதனைகளை நிகழ்த்தியுள்ளது. சமூகத்தில் எந்த ஒரு பிரிவினரையும் பின்தங்க விடமாட்டோம் என்ற குறிக்கோளுடன் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தினார் தமிழ்நாடு முதலமைச்சர். பொருளாதார வளர்ச்சியில் இந்தியாவிலேயே தொடர்ந்து 2 ஆண்டுகள் முதல் இடத்தில் தமிழ்நாட்டை கொண்டு வந்து நிறுத்தினார். இந்த சாதனைகளை நடிகர் விஜய் மீது கொண்டிருந்த திரைக் கவர்ச்சி தோற்கடித்திருப்பது என்பது பெரும் அவலம்!*

*மதச்சார்பற்ற முற்போக்கு அணி 1 கோடியே 54 இலட்சத்து 82 ஆயிரத்து 782 வாக்குகளை பெற்று 73 இடங்களையும் கைப்பற்றியுள்ளது. தவெக 1 கோடியே 72 லட்சத்து 25 ஆயிரத்து 782 வாக்குகளை பெற்று 108 இடங்களை பெற்றுள்ளது. இரு அணிகளுக்கும் இடையே வாக்கு வித்தியாசம் 17 லட்சத்து 43,000; அதாவது 3.5 விழுக்காடு மட்டுமே.*

*பாஜகவுடன் கூட்டணி அமைத்த அஇஅதிமுக 27.4 விழுக்காடு ஓட்டுடன் 3-ம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. இதில் தவெக திராவிட கட்சிகளின் வாக்கு வங்கியில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இதில் அஇதிமுக அணிக்கே பாதிப்புகள் அதிகம்.*

*திமுக, அதிமுக அணிகளே தமிழ்நாடு அரசியலில் மாறி மாறி ஆட்சியைப் பிடித்தவர்கள். இப்போது முதல் முறையாக இரண்டு கட்சிகளும் இல்லாத 'தமிழக வெற்றிக் கழகம்' ஆட்சியைப் பிடித்துள்ளது. ஆனாலும் பெரியார், அம்பேத்கர் தங்களின் கொள்கைத் தலைவர்கள் என்று விஜய் கூறுகிறார். அவர்களின் படங்கள் மாநாட்டு மேடைகளில் அலங்கரிக்கப்படுகின்றன. பெரியாரின் கடவுள் மறுப்பு கொள்கையைத் தவிர ஏனைய கொள்கைகளை ஏற்பதாக கட்சியின் பேச்சாளர்கள் அவ்வப்போது கூறுகிறார்கள். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பது கட்சியின் முழக்கமாக இருந்தாலும் பிறப்பு பாகுபாடுகளை உறுதிப்படுத்தும் பகவத்கீதை கட்சியின் தொடக்க விழா மேடையில் உருவகப்படுத்தப்பட்டது.*

*இரண்டு பார்ப்பனர்கள் கட்சியின் வேட்பாளராக நிறுத்தப்பட்டனர். பார்ப்பனர்கள் தங்களின் ஒரே எதிரியாக திமுகவை மட்டுமே பார்க்கிறார்கள். எனவே திமுகவை எதிர்க்கும் கட்சிகளுக்கு பார்ப்பனர்கள் ஆதரவு தந்து வருகிறார்கள். மயிலாப்பூரில் பார்ப்பன வாக்குகள் இதுவரை அவர்கள் ஆதரித்து வந்த பாஜகவுக்கு வரவில்லை. மாறாக தவெக வேட்பாளராக நிறுத்தப்பட்ட வெங்கட ரமணன் என்ற பார்ப்பனருக்கு விழுந்துள்ளது. அவரே வெற்றி பெற்று இருக்கிறார். பாஜக வேட்பாளரான தமிழிசை 3-ம் இடத்திற்கு தள்ளப்பட்டு இருக்கிறார். தற்போதைய அரசியல் சூழலில் தமிழ்நாட்டில் உறுதியாக பாஜக எதிர்ப்புக் கொள்கை கொண்ட ஒரே கட்சி திமுக மட்டும்தான்! அஇஅதிமுக பாஜகவில் கரைந்து விட்டது. இப்போது ஆட்சிக்கு வந்திருக்கும் விஜய் கட்சி ஒன்றிய ஆட்சி எதிர்ப்பில் பதுங்கிக் கொள்கிறது. தேர்தல் பரப்புரையில் நடிகர் விஜய் ஒன்றிய ஆட்சியை சட்டமன்றத் தேர்தலில் நாங்கள் ஏன் எதிர்க்க வேண்டும் என்று கேள்வி கேட்டு நழுவி விட்டார். திமுகவை வீழ்த்தத் துடிக்கும் பார்ப்பன சக்திகள் விஜய் கட்சியை பாஜகவின் பக்கம் திருப்புவதற்கு அனைத்து முயற்சிகளையும் செய்வார்கள். விஜய்க்கு நெருக்கமான நண்பரான திரிஷா என்ற பார்ப்பன நடிகை தவெக ஆட்சியில் அதிகார மையமாக உருவெடுக்கும் வாய்ப்புகள் காத்திருக்கின்றன.*

*முழுமையான எண்ணிக்கை கிடைக்காத நிலையில் அக்கட்சி ஆட்சி அமைக்க இன்னும் 10 இடங்கள் தேவைப்படுகின்றன. காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தேர்தல் முடிவுக்குப் பிறகு நடிகர் விஜய்யுடன் தொடர்பு கொண்டு வாழ்த்துகளைத் தெரிவித்து தனது ஆதரவுக்கு பச்சைக்கொடி காட்டியுள்ளார். தமிழ்நாட்டில் வெற்றி பெற்ற 5 காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் ஆதரவு த.வெ.க -வுக்கு தரக்கூடும். அப்படி ஒரு நிலை வந்தால் அதை ஆதரிக்க வேண்டும் என்பதே நமது நிலைப்பாடு!*

*தமிழ்நாட்டில் நடக்கும் தேர்தல் டெல்லி அணிக்கும் தமிழ்நாட்டுக்கும் தான் என்று மு.க.ஸ்டாலின் தெளிவாக தேர்தல் களத்தில் அறிவித்தார். முதன்மையான எதிரி பாஜகதான் என்று சரியான கொள்கை நிலைப்பாட்டை முதல்வர் எடுத்தார். அந்தப் பார்வையில் தமிழ்நாட்டில் இப்போது வந்துள்ள புதிய ஆட்சியை பாஜகவின் ஆதரவு சக்தியாக மாற்றி விடாமல் தடுக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே இந்த ஆட்சி பாஜகவின் கட்டுப்பாட்டிற்குள் போய்விடாமல் பாஜக எதிர்ப்பு கொள்கையை உள்ளடக்கிய காங்கிரஸ் இடதுசாரிகள் உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவோடு செயல்பட வைப்பதுதான் சரியான அணுகுமுறையாக இருக்க முடியும். இதுவே முதன்மை எதிரிகளை தமிழ்நாட்டில் இருந்து விலக்கி வைக்கக்கூடிய வாய்ப்பை உருவாக்கக்கூடிய அணுகுமுறையாக இருக்கும்.*

**தற்போதைய நிலையில் பாஜகவை எதிர்க்கும் அணிகள் தவெகவுக்கு ஆதரவு வழங்கினால் பாஜக ஊடுருவலை விலக்கி வைக்க முடியும்.**

*விஜய் அமைச்சரவையில் காங்கிரஸ் இடம் பெற்றால் பாஜகவை நோக்கி திரும்பவிடாமல் ஆட்சியைத் தடுக்கக்கூடும். இது திமுக கூட்டணிக்கு சந்தர்ப்பவாதம் அல்லவா? என்ற கேள்விக்கு நமது பதில் சந்தர்ப்பவாதம் நல்ல நோக்கத்திற்காக பயன்படுத்தப்படலாம் என்பதுதான்.*

*தமிழ்நாட்டில் பாஜக போட்டியிட்ட 27 இடங்களில் ஒரே ஒரு இடத்தில் மட்டும் வெற்றி பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் பாஜகவுக்கு இடமில்லை என்பது மீண்டும் உறுதியாகியுள்ளது. அதன் தலைவர் நயினார் நாகேந்திரன் தோற்றுவிட்டார். தமிழிசை வானதி உள்ளிட்ட முன்னணி தலைவர்கள் போட்டியிட்ட தொகுதிகள் உட்பட 20 தொகுதிகளில் பாஜக வேட்பாளர்கள் மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டு இருக்கிறார்கள்.*

*தமிழ்நாட்டில் பெரியார் கொள்கைகளை குழிதோண்டி புதைப்பேன் என்று கடப்பாரையைத் தூக்கிய நாம் தமிழர் என்ற சீமான் கட்சி துடைத்தெறியப்பட்டுள்ளது. 234 தொகுதிகளிலும் அக்கட்சி டெபாசிட் இழந்துள்ளது. சீமான் டெபாசிட்டை பறிகொடுத்து இருக்கிறார். கடந்த தேர்தலில் 8% விழுக்காடு வாக்குகளைப் பெற்று கட்சிக்கு அங்கீகாரம் பெற்றிருந்த சீமான் இப்போது 4% விழுக்காடு வாக்குகளை பெற்று கட்சியின் அங்கீகாரத்தையும் இழந்து நிற்கிறார்.*

*இத்தகைய தமிழ்நாடு அரசியல் சூழலில் இளைய தலைமுறையினரிடம் சமூக,அரசியல் கருத்துகளை எடுத்துச் செல்ல வேண்டிய தேவையையும் அவசியத்தையும் இந்த தேர்தல் முடிவுகள் தெளிவாக உணர்த்திக் காட்டுகின்றன. அந்த இயக்கத்தை வீரியமாக முன்னெடுக்க திட்டங்களைத் தீட்டி களமிறங்க உறுதியேற்போம்!*

# "இலட்சியமும் கொள்கைகளுமே முக்கியம்"

**மக்கள் தீர்ப்பைத் தலைவணங்கி ஏற்கிறோம் எனவும், வெற்றி பெற்றவர்களுக்கு வாழ்த்துகள் என்றும், சிறப்பான எதிர்க்கட்சியாகச் செயல்படுவோம் எனவும், திமுக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:**



**கடந்த ஐந்தாண்டு காலத்தில் ஏராளமான திட்டங்களை உருவாக்கி, தமிழ்நாட்டு மக்களுக்கு நல்லாட்சியை வழங்கினோம். தமிழ்நாட்டை அனைத்து வகையிலும் உயர்த்தினோம். தேர்தல் களத்தில் எங்களது சாதனைகளைச் சொல்லியே வாக்குகளைக் கேட்டோம். மக்களுக்குச் செய்து கொடுத்த நலத்திட்டங்கள் தொடருவதற்கு வாக்கு கேட்டு நாங்கள் பரப்புரை செய்தோம்.**

**அனைத்துத் தரப்பு மக்களுக்கும் உண்மையான ஆட்சியைத் தந்தேன்! திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட் டணியை ஆதரித்து வாக்களித்த தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் நான் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**வாக்களித்தவர்களுக்கு மட்டுமல்ல, வாக்களிக்க மறந்தவர்களுக்கும் சேர்த்தே ஆட்சி நடத்தினேன். அனைத்து மக்களுக்கும் உண்மையாக இருந்தேன். நான் எனது மனச்சாட்சிப்படியே செயல்பட்டேன். நான் எனது சக்தியை மீறி உழைத்தேன். என்னைப் போன்றே களத்தில் உழைத்த என் உயிரோடு கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன் பிறப்புகள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றி! எங்களோடு தோளோடு தோள் நின்ற தோழமை இயக்கத் தலைவர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் அனைவருக்கும் நன்றி!**

**எனது அரசியல் பொதுவாழ்வில் அதிகப்படியான வெற்றியையும் பார்த்துள்ளேன்; தோல்விகளையும் சந்தித்துள்ளேன். இலட்சியமும் கொள்கையும்தான் முக்கியம் எனச் செயல்படுபவன்! எனவே இலட்சியமும் கொள்கையும்தான் முக்கியமே தவிர, வெற்றி தோல்விகள் மட்டுமல்ல என்று செயல்படக் கூடியவன் நான்.**

**அதனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் பயணம் தொய்வில்லாமல் தொடரும். இதுவரை மக்களுக்காகச் சிறப்பான ஆளும்கட்சியாகச் செயல்பட்ட தி.மு.க. – இனி சிறப்பான எதிர்க்கட்சியாகச் செயல்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

# தீர்ப்பை மாற்றி எழுத மக்களைத் தயார் செய்வோம்!

ஒவ்வொரு முறையும் கொளத்தூர் தொகுதிக்கு போகும்போதெல்லாம் மக்களை சந்திக்கும் போது மிகவும் உற்சாகம் பெறுவதாக மு.க ஸ்டாலின் பெருமையுடன் கூறுவார்; மிகவும் கவலை எடுத்து தனது தொகுதியை வளர்த்தெடுத்து அடுக்கடுக்கான திட்டங்களைக் கொண்டு வந்தார். அதே கொளத்தூர் தொகுதி இன்று முதல்வரை கைவிட்டதை அறியும்போது இதயம் வலிக்கிறது.

தனது ஐந்தாண்டு ஆட்சியை சாதனைகளின் சரித்திரம் ஆக்கினார் மு. க.ஸ்டாலின். இந்திய வரைபடத்தில் தமிழ்நாட்டை பல்வேறு துறைகளில் முதலிடத்தில் கொண்டு வந்த நிறுத்தினார். ஒன்றிய ஆட்சி வஞ்சகத்தை இவரைப் போல் துணிவுடன் வேறு எந்த மாநில முதல்வரும் எதிர் கொள்ளவில்லை.

இவர் செயல்படுத்திய பெண்களுக்கான உரிமை திட்டங்கள் தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல; இந்தியாவின் பல்வேறு மாநிலங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. தமிழ்நாட்டுப் பெண்களுக்கு கிடைத்த உரிமை பல்வேறு மாநில பெண்களுக்கும் இவரால்தான் கிடைத்தது.

பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டிற்கும் ஆளுநரின் அத்துமீறல்களிலிருந்து மாநில உரிமைகளை காப்பாற்றுவதற்கும் இவர் மேற்கொண்ட சட்டப் போராட்டங்களும் ;அதில் கிடைத்த வெற்றிகளும் தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல; இந்தியாவின் பிற மாநிலங்களுக்கும் உரிமைகளை கிடைக்கச் செய்தன.

புதிய புதிய மக்கள் நலத்திட்டங்களை தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்தார். அந்த திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு மிக நேர்த்தியான செயல் திட்டங்கள் உருவாக்கப்பட்டன.இதை பிற மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு குழுவினர் வந்து நேரில் கண்டறிந்து தங்கள் மாநிலங்களில் பின்பற்றினர்.

இப்படி இவர் நடத்திய ஆட்சி தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல; ஏனைய மாநிலங்களுக்கும் பயன்களை. கிடைக்கச் செய்தன. கொள்கை மாறுபாடு கொண்டவர்களையும் அவர் நேசித்தார்; அவர்களுக்கு பாராட்டுகளையும் விருதுகளையும் வழங்கினார்.

தமிழர் நாகரிகத்துக்கு முந்தையது கங்கைச் சமவெளி நாகரிகம் என்ற ஆரிய வரலாற்றுப் புரட்டை உடைத்த கீழடி நாகரீக ஆய்வுகளுக்கு ஆதரவாக நின்றார். அதற்கான அருங்காட்சியகத்தை உருவாக்கி ஆரிய புரட்டுகளுக்கு பதிலடி தந்தார்.

இந்தியாவிலேயே ஒன்றிய ஆட்சியின் மதவாத அரசியலுக்கும் மாநில உரிமை பறிப்புக்கும் எதிராக இவரது குரல் மட்டும் தான் சிங்கமாக கர்ஜித்தது. இந்தியாவிலேயே மு.க.ஸ்டாலின் ஒருவர் மட்டும்தான் பாஜகவின் அரசியலுக்கு கடும் நெருக்கடி தந்து வருகிறார் என்று எதிரிகளே ஒப்புதல் வாக்குமூலம் தந்தார்கள்.

நாடாளுமன்றத்தில் ஒன்றிய ஆட்சியை மைனாரிட்டியாக மாற்றி அமைத்த பெருமை தமிழ்நாட்டிற்கு உண்டு; ஒரு இடத்தில் கூட நாடாளுமன்ற தேர்தலில் பாஜக வெற்றி பெறாமல் தடுத்து நிறுத்தினார் மு.க.ஸ்டாலின். அதனால் தான் தொகுதி "மறுவரையறை" சதி தடுத்து நிறுத்தப்பட்டு அதன் பயன் தென்னகம் முழுவதற்கும் கிடைத்தது.

ஆக தமிழ்நாடு முதல்வர் மு.க ஸ்டாலின் தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல; இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கும் உரிமை மீட்பராக; வழிகாட்டியாக செயல்பட்டு திராவிட மாடலுக்கு மகுடம் சூட்டினார்.

அரசியல் ரீதியாக எந்த ஒரு குற்றச்சாட்டையும் சுமத்த, முடியாமல் தீய சக்தி என்ற வெற்று முழக்கத்தோடு திரைப்பட பிம்பம் வழியாக கட்டமைக்கப்பட்ட மலிவான எதிர்ப்பு இப்போது வெற்றி பெற்று இருக்கிறது.

அடுத்த ஐந்தாண்டு காலம் தமிழ்நாட்டு மக்களின் கதி என்ன ஆகுமோ? என்று அச்சமாக இருக்கிறது. வளர்ச்சிக்கான திட்டங்கள் சீர்குலைந்து போய்; தமிழ்நாட்டை பின்னுக்குத் தள்ளி விடுமோ? என்பது பற்றி எந்த கவலையும் இல்லாமல் திரைப்பட பிம்பம் என்ற மாய வலையில் சிக்கிய வாக்காளர்கள் திமுக ஆட்சி தொடரவிடாமல் தடுத்து நிறுத்தி இருக்கிறார்கள்.

இந்த மக்கள் தீர்ப்பை வரவேற்போம் என்று சொல்வதற்கு நாம் தயாராக இல்லை. இந்த தீர்ப்பை மாற்றி எழுதுவதற்கு மக்களை தயார் செய்வோம்! அதற்கான களத்தை தீவிரப்படுத்துவோம்! தமிழ்நாட்டின் பெருமையாக நிமிர்ந்து நிற்கும் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு முன்பை விட இன்னும் தீவிரமான ஆதரவை வழங்க உறுதி ஏற்போம்.

மு.க.ஸ்டாலின் அவர்களே! "லட்சியங்களும் கொள்கைகளும் தான் எனக்கு முக்கியமே தவிர வெற்றி தோல்விகள் மட்டுமல்ல"என்று நீங்கள் இப்போது வெளியிட்டுள்ள அறிக்கை உங்களின் தலைமைப் பண்புக்கு மகுடம் சூட்டி இருக்கிறது.

களத்தில் தோற்கலாம்; போராட்டம் தொடர்கிறது!


–விடுதலை இராசேந்திரன், 05.05.2026

# பண்ணையார்களைப் பணியவைத்த திருவாதிரைமங்கலம்!

*வரலாற்றுப் பதிவுகள் இல்லாத எத்தனையோ போராட்டங்களை பெரியார் இயக்கம் நடத்தி இருக்கிறது. உள்ளூர் மட்டத்தில் நடந்த அந்த சமூகப் புரட்சிகளை, கருஞ்சட்டை வீரர்களை வெளிச்சப்படுத்தும் கட்டுரைத் தொடரை முரசொலியில் ஊடகவியலாளர் ர.பிரகாசு எழுதி வருகிறார். திருவாதிரை மங்கலம் குறித்தும் திராவிட தொழிலாளர் சங்கம் குறித்தும் விவரிக்கிறது இக்கட்டுரை தொடர்.*

நெடுங்காட்டன்குடி, சூரனூர், சோழிங்கநல்லூர், வடகுடி, எழுமுக்கால், கீழவைப்பூர், குரும்பேரி, தேராகுளம் உள்ளிட்ட 18 கிராமங்களை உள்ளடக்கிய ஊராட்சி, திருவாதிரை மங்கலம். அதன் தலைகிராமம் திருவாதிரை மங்கலம்தான். 1950-க்கு முன்பு, ஊராட்சி முழுவதுமே ஆண்டான் - அடிமை, முதலாளி - தொழிலாளி, ‘ஆதிக்கஜாதி - ஒடுக்கப்பட்ட ஜாதி’ என வர்க்கமும் வர்ணமும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்த சூழலே நிலவியது. பண்ணையார்கள் வீட்டிற்குள்கூட தாழ்த்தப்பட்டவர்கள் நுழைய முடியாது. உணவோ, தண்ணீரோ திண்ணையில் அமர்ந்துகூட உண்ண முடியாது. கொல்லைப்புறத்தில் வைத்து கொடுப்பார்கள். பள்ளி செல்லவும் தாழ்த்தப்பட்டோருக்கு அனுமதி கிடையாது. இந்தச் சூழலில் 1950-களின் பிற்பகுதியில், நாகை மற்றும் திருவாரூரில் வீச்சாகப் பரவிய திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம் திருவாதிரைமங்கலத்திலும் ஆழ வேரூன்றியது. உத்திராபதி, அந்தோணிசாமி, மாரியப்பா என திராவிடர் கழக முன்னோடிகள் பலர் திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கத்தைப் பலப்படுத்தி, பெரும்பகுதி மக்களை இயக்கமாக்கினர். ஆண்டுக்கு ஒரு முறையாவது பெரியாரை அழைத்துவந்து ஏதேனும் ஒரு குக்கிராமத்தில் கூட்டம் நடத்துவதை வழக்கமாக்கினர். பேருந்து வசதிகூட இல்லாத அக்காலத்தில், பெரும்பாலும் மாட்டுவண்டியிலேயே பெரியாரை அழைத்துவந்து அக்கூட்டங்களை நடத்தியுள்ளனர்.

பெரியாரும் அங்கு நிலவிய ஏற்றத்தாழ்வுகளைக் கடுமையாகச் சாடி பேசியிருக்கிறார். பண்ணையார்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த பெரியாரின் பேச்சுகள் ஏற்படுத்திய தாக்கத்தால், பள்ளி செல்லும் வயதிலேயே நூற்றுக்கணக்கான சிறுவர்கள் பெரியார் தொண்டர்கள் ஆகினர். திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம் குக்கிராமங்கள் வரை விரிவடைந்து வளர்ந்தது. பண்ணையார்கள் வீட்டுக்கு ஆடு, மாடு மேய்க்க செல்லக்கூடாது, அடிமை வேலைகளுக்குச் செல்லக் கூடாது எனத் தடுத்தது திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம். சாணி அள்ளக்கூடாது, பறை அடிக்க செல்லக்கூடாது என்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். அதனால், சங்கத்தில் இருப்போரை கூலியாட்களாக அழைப்பதையே தவிர்க்கத் தொடங்கினர் பண்ணையார்கள். ஆனாலும், மற்ற மக்களையும் திரட்டி அடிமைத்தனத்தில் இருந்து வெளியேறவும், கூலித்தொகையைப் பங்காக உயர்த்தித் தரவேண்டுமென்றும் கேட்டு போராட்டத்தை வலுப்படுத்தியது. தொடர் நெருக்கடிகளால், பேச்சுவார்த்தைகளால் பண்ணையார்கள் பணிய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆதிக்கம் தவிடுபொடியானது. விவசாய சங்கம் வலுப்பெற்ற காலத்திலேயே திருவாதிரைமங்கலத்தில் படிப்பகம் ஒன்றை உருவாக்கினர்.




வீட்டுக்கு வீடு வானொலிகூட இல்லாத அந்தக் காலத்திலேயே படிப்பகத்தில் வானொலி வாங்கி வைத்து தினமும் மக்கள் செய்திகளை அறிந்து கொள்ள வழிவகை செய்தனர். எல்லோருக்கும் படிக்கத் தெரியாத காலம் என்பதால், ‘விடுதலை’ பத்திரிகையை ஒருவர் வாசிக்க, பலர் கூட்டமாக அமர்ந்து செய்திகளைக் கேட்டுக்கொள்வார்கள். கல்வியறிவு பெறுவதற்கு முன்பே சமூக அறிவை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பை ‘வானொலி’யும் ‘விடுதலை’ நாளிதழும் ஏற்படுத்தின. பின்னர், சோழிங்கநல்லூர் கிராமத்தில் பெரியார் மருத்துவமனை கட்டப்பட்டது. அரசிடம் பேசிப்பேசி திருவாதிரைமங்கலத்தில் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிகளை ஏற்படுத்தினர்.

**இயக்கப் பணிகளோடு நின்றுவிடாமல் மக்களுக்கு அடிப்படைத் தேவைகளை ஏற்படுத்தித் தருவதிலும் திருவாதிரைமங்கலத்தில் திராவிட இயக்கத்தினர் முன்நின்றனர்.**

நியாய விலைக்கடைகளைப் பெற்றுக்கொடுத்தனர். இயக்கப் பணிகளோடு நின்றுவிடாமல் மக்களுக்கு அடிப்படைத் தேவைகளை ஏற்படுத்தித் தருவதிலும் முன்நின்றனர். திருவாதிரைமங்கலத்தில் திராவிட இயக்கத்தின் இருப்பை உறுதி செய்வதற்கான ஆதாரமாக அந்தப் படிப்பகமும் மருத்துவமனையும், கல்விக் கூடங்களும் இன்றும் இயங்கிக்கொண்டே இருக்கின்றன.

திருவாதிரைமங்கலத்தில் திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம் ஏற்படுத்திய தாக்கத்தின் காரணமாக, விவசாயப் பிரச்சினைகள் மட்டுமல்லாது, பகுத்தறிவுச் சிந்தனைகளை நோக்கியும் ஊர்மக்களின் கவனம் திரும்பியது. கோயில் திருவிழாக்களைத் தவிர்க்கத் தொடங்கினர். தீபாவளி கொண்டாடும் வழக்கத்தைக் கைவிட்டனர். பட்டாசு வெடித்தால் அபராதம் விதிக்கப்பட்டது. ஜோசியம் பார்க்கக்கூடாது, குறிசொல்ல ஊருக்குள் வர எவருக்கும் அனுமதி இல்லை. வேண்டுதல் என்ற பெயரில், மொட்டை அடிக்கக்கூடாது. ஊர் எல்லையிலேயே இந்தக் கட்டுப்பாடுகளை எழுதி, பதாகை வைக்கப்பட்டிருக்கும். அவற்றையெல்லாம் ஊர் மக்கள் கட்டுப்பாடாக அல்ல, கடமையாகக் கருதி அப்படியே பின்பற்றினார்கள். இன்னொருபுறம், பெரியார் அறிவித்த அத்தனை போராட்டங்களிலும் திருவாதிரை மங்கலம் மக்கள் தவறாமல் பங்கெடுத்தனர். 1973-இல் பெரியார் மறைந்தபோது, லாரி நிரம்ப ஆட்கள் சென்னைக்கு வருகைதந்து, ராஜாஜி அரங்கில் பெரியாருக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். அடுத்த ஆண்டே பெரியார் திடலில் அன்னை மணியம்மையார் ஏற்பாடு செய்த ராவண லீலாவுக்கும் திருவாதிரைமங்கலத்தில் இருந்து மட்டும் ஒரு தனி லாரி புறப்பட்டது.

1980-களில் அருகே உள்ள உக்கூர் கிராமத்தில் பெரியார் சிலையை அடையாளம் தெரியாத நபர் ஒருவர் சேதப்படுத்தியுள்ளார். அந்த நபரையே வரவைத்து சிலையைச் சரிசெய்ய வேண்டுமென்று ஒட்டுமொத்த திருவாதிரைமங்கலம் மக்களும் சாலை மறியலில் ஈடுபட்டனர். காவல் துறைக்கும் நெருக்கடிகள் முற்றவே, சிலையைச் சேதப்படுத்திய நபரே பயந்துபோய், தன் செயலுக்கு வருந்தி சிலையைச் சரிசெய்து கொடுத்தார்.

கடுமையான கட்டுப்பாடுகள் நடைமுறையில் இருந்த அந்த ஊரில்தான் திருவாதிரைமங்கலம் சிவலோகநாதசுவாமி கோயிலும் உள்ளது. ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் நடமாட்டமே இல்லாமல், சிதிலமடைந்து கைவிடப்பட்ட நிலையில் இக்கோயில் இருந்தது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்புதான் மீண்டும் புனரமைத்து வழிபடத் தொடங்கியுள்ளனர். எனினும், இப்போதும் திருவாதிரைமங்கலத்தைச் சேர்ந்த மக்கள் செல்வது மிகச் சொற்பம்தான். ஏனெனில், இன்றும் அங்கு நூற்றுக்கணக்கான குடும்பங்கள் திராவிட இயக்க உணர்வோடு பின்னிப்பிணைந்த குடும்பங்களே. அதன் காரணமாகவே ஊருக்குள் இப்போது ஜாதி ஆதிக்கமோ, மற்றெந்த ஆதிக்கமோ நடைமுறையில் இல்லை. திராவிடர் கழகத்தை சேர்ந்த ராஜேந்திரன் இவ்வாறு கூறுகிறார்: “என்னுடைய சிறுவயதில் விவசாயம் தொடர்பாக, நாகை பாட்சாவை சந்திக்கச் சென்றிருந்தேன். அப்போது, நிகழ்ச்சிக்காக பெரியார் அங்கு வந்திருந்த நிலையில், என்னையும் அழைத்துச் சென்றார். அன்றைக்கு பெரியார் பேசியதைக் கேட்டு ஈர்ப்பு ஏற்பட்டு, பிறகு சுற்றுவட்டார கிராமங்களுக்கு பெரியார் எப்போது வந்தாலும் பார்க்கச் சென்றுவிடுவேன். என் பள்ளிக்காலத்திலேயே 16 முறை அப்படி பார்த்துவிட்டேன். பெரியார் ஒருவரால்தான் எங்கள் ஊரில் ஜாதி ஆதிக்கம் ஒழிந்து கல்வி, வேலைவாய்ப்பில் மக்கள் முன்னேற்றம் கண்டனர்”.


# பார்ப்பனிய எதிர்ப்புக்கு உள்நோக்கம் கற்பித்தவர் ஜீவா

**ஜீவாவின் பெரியார் மீதான விமர்சனம் [15]** - கொளத்தூர் மணி

தோழர் ஜீவா அவர்கள் தனது 'ஈரோட்டுப் பாதை சரியா?' என்ற நூலில் முன் வைத்திருக்கும் வேறொரு குற்றச்சாட்டைப் பற்றியும் பார்ப்போம்.

**"1.8.1927இல் சென்னையில் நால்வர் சந்திப்பு நடந்தது. அது குறித்து அடுத்த வார குடிஅரசில் வெளியான "பிராமணிய சடங்கை விலக்கியவர்" பட்டியலில் ஈ.வெ.ரா., திரு.வி.க., டாக்டர் நாயுடு, ஷண்முகம் ஆகிய நால்வரின் பெயர்களும் முன் வரிசையில் இடம்பெற்றன. இவ்வாறு காங்கிரஸ்காரரோடு இணைந்து சமூக சீர்திருத்தத்திற்கு ஆதரவு தேடுவதாகக் காட்டி காங்கிரஸ் ஒழிப்பு வேலைக்கு மறைமுகமாகப் பணம் திரட்ட முனைந்தார் ஈ.வெ.ரா."**

என்னதான் உண்மை? 25.7.1926 குடிஅரசு இதழின் 9ஆம் பக்கத்தில் 'சென்னையில் நால்வர்' என்ற தலைப்பில் ஒரு குறிப்பு காணப்படுகிறது.அதில் "காங்கிரஸ் பார்ப்பனரல்லாத தலைவர்களான ஸ்ரீமான்கள் திரு.வி.கல்யாணசுந்தர முதலியார், ஈ.வெ. ராமசாமி நாயக்கர், டாக்டர் வரதராஜுலு நாயுடுகாரு, ஆர்கே சண்முகம் செட்டியார் ஆகிய நால்வரும் அரசியல் சமுதாய விஷயங்களில் தற்காலம் இருக்கும் நிலைமையில் இனி தாங்கள் நடந்து கொள்ள வேண்டிய விஷயத்தைப் பற்றி சென்னையில் இம்மாதம் 19,20-ஆம் தேதி ஆகிய இரண்டு நாட்களிலும் கூடி ஆலோசித்தனர். முடிவில் அரசியல் விஷயம் சம்பந்தப்பட்ட வரையில் ஒருவர் அபிப்பிராயம் மற்றவரைக் கட்டுப்படுத்தாது என்றும், சமூக சமத்துவ விஷயத்தில் ஒரே விதமான அபிப்பிராயம் கொண்டவர்களாய் நாங்கள் எல்லோரும் இருக்கிறோம் என்கிற ஒரு விதமான தீர்மானத்திற்கு வந்தனர்" என்று காணப்படுகிறது.



அதே குடிஅரசு இதழில் ''பார்ப்பனர் அல்லாதவர்களுக்கு ஓர் வேண்டுகோள்" என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள தலையங்கத்தின் ஒரு பகுதியில், 'பலர் சேர்ந்து குறிப்பிட்ட கட்டுப்பாடோ திட்டமோ ஏற்படுத்திக் கொள்ளாமல் தனித்தனியாக செய்து வருவதால், எதிர்பார்க்கும் பலனை அடைய கூடுமோவென சந்தேகிக்கக் கூடியதாய் இருக்கிறது. இவ்வார ஆரம்பத்தில் ஸ்ரீமான்கள் டாக்டர் வரதராஜுலு நாயுடுகாரு, திரு. வி.கல்யாண சுந்தர முதலியார், ஆர். கே.ஷண்முகம் செட்டியார், என். தண்டபாணி பிள்ளை முதலியவர்களோடு சென்னையில் கூடி இரண்டு நாள் யோசித்தும் பல காரணங்களால் தேர்தலுக்கு முன் ஒருவித முடிவுக்கு வர முடியாமல் போய்விட்டது ஆனபோதிலும் ,....... .... ....... ......... ......... அடுத்த வாரத்தில் ஒரு அறிக்கை வெளியிட வேண்டும் என்கிற ஆவல் கொண்டிருக்கிறோம். இவ்வறிக்கையில் பல கனவான்களின் கையொப்பங்களையும் சேர்த்து வெளியிட வேண்டும் என்ற விருப்பம் கொண்டிருக்கிறபடியால் தத்துவங்களை ஏற்றுக் கொள்ளும் கனவான்களை தங்கள் பெயரையும் இவ்வறிக்கையில் சேர்த்துக் கொள்வதற்கு முழு விலாசத்துடன் தங்கள் சம்மதத்தையும் உடனே எழுதி அனுப்பும்படி வேண்டிக் கொள்கிறோம்' என 'ஈ.வெ.ராமசாமி' என்ற கையொப்பமிடப்பட்டு அறிக்கை வெளி வந்திருக்கிறது.

**காங்கிரஸ் கட்சியின் பார்ப்பனர் அல்லாத தலைவர்களை கொண்டு பார்ப்பன சடங்குகளை நீக்கும் இயக்கத்தை தொடங்கினார் பெரியார். இதற்கு "பணம் திரட்டும்" இயக்கம் என்று மலிவான உள்நோக்கம் கற்பித்தவர் ஜீவா.**

அடுத்து 1.8.1926 நாளிட்ட குடிஅரசு இதழில் 9ஆம் பக்கத்தில் 'நமது தனிப்பெரும் விண்ணப்பம்' என்ற தலைப்பில் "சென்ற குடி அரசு இதழில் திரு. ஈ.வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் பார்ப்பனரல்லாதாருக்கு விடுத்த வேண்டுகோளை அன்பர்கள் கண்ணுற்றிருக்கலாம். திரு. நாயக்கர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இற்றை வரை சுமார் 500 தமிழர்கள் குடிஅரசின் கொள்கையை ஏற்றுக் கொள்வதாகவும் திரு. நாயக்கர் உள்ளிட்ட பலர் வெளியிடப் போகும் அறிக்கையில் தங்கள் பெயரையும் சேர்த்துக் கொள்ளுமாறும் தங்கள் கையொப்பம் அளித்துள்ளார்கள் என்றும் காணப்படுகிறது

8.8.1926 குடிஅரசு இதழின் 11 ஆம் பக்கத்தில் 'பிராமணியத்தை ஒழித்தவர்கள்' என்ற தலைப்பில் ஒரு செய்தி குறிப்பு காணப்படுகிறது.

அதில், "சென்னையில் கொஞ்ச நாளைக்கு முன்பு ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடுகாரு, ஆர்.கே.ஷண்முகம் செட்டியார், திரு. வி.கல்யாணசுந்தர முதலியார், என். தண்டபாணி பிள்ளை, ஈ.வெ. ராமசாமி நாயக்கர் முதலியவர்கள் கூடிப் பேசியதாகவும், அதன் முடிவு என்ன என்பதைப் பற்றியும் முந்திய இதழில் எழுதி இருந்தது வாசகர்களுக்கு நினைவு இருக்கலாம்".

"அதாவது அரசியல் விஷயத்தைப் பற்றி அவரவர்கள் அபிப்பிராயப்படி நடந்து கொள்வது என்றும், சமூக சமத்துவ விஷயங்களில் எல்லோரும் ஒரே அபிப்பிரமாய் இருக்கிறோம் என்றும், இது விஷயத்தில் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது என்றும் எழுதியிருந்தோம். ...... ..... .... ... ... ,,.... ..... ... ......... .... ...................... ............... .............. ............... .................... .............. ............... பார்ப்பனர்களைக் கொண்டு செய்யப்படும் சடங்குகளை நிறுத்துவதற்கு முதல் முதலாக பிரச்சாரம் செய்ய வேண்டும் என்றும், அப்படி செய்வதில் தங்கள் தங்கள் பெற்றோர்களையும், மற்றையோர்களையும் மோட்சத்திற்கு அனுப்புவது என்றும் அவர்கள் சுகமாய் இருப்பதற்கென்றும் பார்ப்பனர்களைக் கொண்டு திதி, திவசம் என்றோ, சிரார்த்தம் என்றோ சொல்லும்படியான பல வைதிக சடங்குகள் செய்வதில் ஒன்றும் பலனில்லை என்றும், அம்மாதிரி சடங்குகள் பார்ப்பனர்கள் பிழைப்புக்கு ஏற்படுத்திக் கொண்டதல்லாமல் வேறில்லை என்பதை பார்ப்பனரல்லாதாருக்குத் தெரிவிப்பதற்காக ஒரு பிரச்சாரம் ஆரம்பிப்பது என்றும், அதில் அப்போதிலிருந்து பேசிய ஐவரும் மற்றும் அதற்கு சம்மதித்தவர்கள் பெயரையும் வெளியிட்டு வருவது என்றும் முடிவு செய்து அதன்படியே சென்ற வாரத் 'தமிழ்நாடு' பத்திரிகையும் ( திரு. வரதராஜுலு அவர்களின் பத்திரிகை) 'பிராமணியத்தை ஒழித்தவர்கள்' என்ற தலைப்பின் கீழ் பல கனவான்களின் பெயர் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது" .... என்ற குறிப்பு காணப்படுகிறது. அதன் இறுதிப் பகுதியில் மேற்கூறிய பிரகாரம் பிராமணியத்தை விரட்டியவர்களான இன்று ஸ்ரீமான்கள்


1.டாக்டர் வரதராஜீலு நாயுடு, அசோக விலாஸ், சேலம்.

2. திரு.வி.கல்யாணசுந்தர முதலியார், நவசக்தி ஆசிரியர், சென்னை

3. ஈ.வெ. இராமசாமி நாயக்கர், குடிஅரசு ஆசிரியர், ஈரோடு.

4. ஆர்.கே. ஷண்முகம் செட்டியார், ஹவார்டன், கோயமுத்தூர் ...... என்பதன் தொடர்ச்சியாக ஜே.எஸ்.கண்ணப்பர், என்.தண்டபாணி பிள்ளை. எஸ்.ராமநாதன், மணவை ரெ. திருமலைசாமி போன்ற பலரின் பெயர்களும் வெளியிடப்பட்டுள்ளன.

அடுத்தடுத்து குடிஅரசு இதழ்களில் பிராமண சடங்கை விலக்கியவர்கள் என்ற பெயரில் பட்டியல் வந்த வண்ணமாக இருந்தது. இந்த முன்னெடுப்பைத்தான் 'மறைமுகமாக பணம் திரட்ட முனைந்தார் ஈ.வெ.ரா' என்கிறார் ஜீவா.



**பெரியார்மீது மற்றொரு குற்றச்சாட்டு.**

"ஈ.வெ.ரா. தன்னிச்சையாக ஒரு திட்டத்தைத் தயாரித்து, அதை ராஜாஜிக்கும் பொப்பிலி அரசருக்கும் (கோவையில் நடந்த தமிழ் மாகாண காங்கிரஸ் மகாநாட்டுக்கும், சென்னையில் நடந்த ஜஸ்டிஸ் மாகாண மகாநாட்டுக்கும்) அனுப்பினார். அந்த திட்டத்தை ஒத்துக்கொள்கிறவர் கட்சியைத் தேர்தலில் ஆதரிப்பதாகவும் சொன்னார்.

ஜஸ்டிஸ் கட்சியினர் ஈ.வெ.ரா.வின் திட்டத்தை (ஈரோட்டுத் திட்டத்தை அல்ல) ஒப்புக்கொள்வதாக உறுதிகூறி சென்னை மகாநாட்டில் இதற்காக ஒரு கமிட்டியையும் தேர்ந்தெடுத்தனர். ஈ.வெ.ரா.வும் பிரிந்திருந்த ஜஸ்டிஸ் கட்சியை மனதாரத் தழுவினார்" என்று எழுதிவிட்டு, "அடுத்துவரும் தேர்தலில் நல்ல அறுவடை செய்துவிடலாமென்று மனப்பால் குடித்து ஜஸ்டிஸ் கட்சிக்கு சமதர்ம மெருகு கொடுக்க என்னென்னவோ செய்துகொண்டிருந்தார் ஈ.வெ. ரா" என்றும் எழுதினார் ஜீவா. இதனை குறித்து விளங்கிக் கொள்ள 'பதின்மூன்றாவது ஆண்டு' என்ற தலைப்பிட்ட 15.8.1937ஆம் நாளிட்ட குடி அரசு இதழின் தலையங்கத்தைப் பார்த்தாலே புரிந்து கொள்ளலாம்.

"நிற்க, ஜஸ்டிஸ் கட்சிக்கு "குடி அரசு" ஆதரவளித்ததால் "குடி அரசு"ம் ராமசாமியும் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்க்கப்பட்டதாலேயே ஜஸ்டிஸ் கட்சிக்கு சர்க்கார் எதிரியானார்கள் என்று ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்களில் பலர் இன்றும் சொல்லுகிறார்கள். ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து தோழர் ராமசாமியை விரட்டவும் "குடி அர"சை ஒழிக்கவும் ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்கள் சிலர் எவ்வளவோ பாடு பட்டார்கள்.

ஒரு உதாரணம் காட்டுகிறோம். அதாவது தோழர் ஈ.வெ.ரா. தனது திட்டங்கள் சிலவற்றை ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டில் வலியுறுத்தப் போவதாக "குடி அரசில்" வெளிப்படுத்தியவுடன் சென்னையில் கடைசியாக நடந்த ஜஸ்டிஸ் கட்சி மாகாண மகாநாட்டுக்கு ஈ.வெ. ராவுக்கு பிரதிநிதி டிக்கட் கொடுக்க மறுத்து விட்டார்கள். தோழர்கள் சி.டி. நாயகம், டி.ஏ.வி.நாதன் முதலியவர்கள் பாடுபட்டும் வரவேற்பு கமிட்டியார் மறுத்து விட்டார்கள். கடைசியாக செட்டிநாட்டு குமார ராஜா அவர்கள் தகவலுக்கு இவ்விஷயம் கொண்டு போகப்பட்டு அவரது சிபார்சின் மீது மகாநாட்டு பிரதிநிதி டிக்கட் கிடைத்தது என்றால் ஜஸ்டிஸ் கட்சியால் ராமசாமியோ "குடி அரசோ" எந்த விதத்தில் தனது கொள்கையை விட்டுக் கொடுத்து விட்டதாகச் சொல்ல முடியும்? அன்றியும் அக்கட்சியை ஆதரித்ததால் இன்ன சுயநலம் பெற்று விட்டது என்று தான் சொல்ல முடியுமா?

உண்மையை சொல்ல வேண்டுமானால் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் தோழர் பொப்பிலிராஜா அவர்கள் சமதர்மக் கொள்கையை கட்சியில் புகுத்தி அவரது தலைமையில் பல சட்டங்கள் செய்திருக்கிறார்கள். அவற்றை (அந்த காலகட்டத்தில் சந்தா உறுப்பினராக தோழர் ஜீவா இருந்த) காங்கிரஸ் எதிர்த்து வந்திருப்பதோடு இப்போதும் அழிக்கப் புறப்பட்டு விட்டது. ஆகவே இந்த இரண்டு காரியங்களால் "குடி அரசு" எவ்விதத்திலும் கொள்கை மாற்றம் அடைந்து விட்டதா என்பதை பொதுமக்கள் யோசித்துப் பார்க்கட்டும்".

"அந்த ஜஸ்டிஸ் கட்சியோடு பெரியார் உறவாடுகிறார்" என்று குற்றம் சாட்டி வெளியேறிய ஜீவாவை சுட்டி எழுதப்பட்டதுதான் அந்தத் தலையங்கம்.

**தொடரும்...**

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# புத்துணர்வூட்டிய சென்னை பயிலரங்கம்!

மறைந்த கழக செயல்வீரர் பத்ரி நாராயணனின் 22வது நினைவு நாளான ஏப்ரல்-30 காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை, திருவல்லிக்கேணி பகுதிச் செயலாளர் சே. ராஜேஷ் தலைமையில், பகுதி அமைப்பாளர் த.நா. சூர்யா முன்னிலையில், பயிலரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டது. பகுதித் தலைவர் சு. கோபிநாத் வரவேற்புரையாற்றினார்.



சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி - சத்யா - லதா, பொன்ராஜ் குழுவினரின் பாடல்கள் சிந்திக்க வைத்தன.

"அமைப்பாக திரள வேண்டியதின் அவசியம் என்ன?" எனும் தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். ஒரே நாளில், ஒரே நேரத்தில் அனைத்து மாவட்டங்களிலும் போராட்டத்தை ஒருங்கிணைப்பதன் காரணத்தை விளக்கினார்.

"சமகால சிக்கல்களில் பெரியாரிய பார்வை" குறித்து கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் சிறப்புரையாற்றினார். கம்யூனிச இயக்கங்களும் பெரியார் இயக்கமும் ஒன்றிவரும் புள்ளிகளையும் - வேறுபடும் புள்ளியையும் எடுத்துரைத்தார். நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற இந்திரகுமார் தேரடி, "பெரியாரியலும் அரசமைப்புச் சட்டமும்" என்ற தலைப்பில் வகுப்பெடுத்தார்.

அரசமைப்புச் சட்டத்தில் ஜாதியை பாதுகாக்கும் பிரிவுகளை அம்பேத்கர் வழியில் பெரியார் தொண்டர்கள் எரித்ததை நினைவுகூர்ந்தார். பயிலரங்கில் பங்கேற்ற 60க்கும் மேற்பட்ட தோழர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. கழகக் களப்பணியாளர் வீராவின் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது!

## கழகத் தோழர் பத்ரிநாரயணன் நினைவேந்தல் நிகழ்வு!

இராயப்பேட்டையை பெரியார் பாசறையாக மாற்றிய கழகச் செயல் வீரர் பத்ரி நாராயணன் அவர்களின் 22-வது நினைவு நாளை முன்னிட்டு இரா.உமாபதி தலைமையில் கழகத் தோழர்கள் மயிலாப்பூரில் உள்ள அவரது நினைவிடத்துக்கு 30.04.2026 அன்று ஊர்வலமாக சென்று மாலை அணிவித்து மரியாதை செய்தனர். தோழர் பத்ரி நாரயணனின் நினைவுகளை பாடலாக தோழர்கள் பொன்ராஜ், சத்யா, லதா ஆகியோர் இணைந்து பாடினர்.

கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பேசுகையில் சென்னையில் தலித்துக்களையும், இஸ்லாமியர்களையும் பெரியார் இயக்கத்தின் பக்கம் ஒன்றிணைத்தவர்களில் பத்ரி முதன்மையானவர். மேலும் கொண்ட கொள்கையில் துடிப்போடு பணியாற்றிய ஆற்றல்மிகு இளைஞர் என்று கூறினார்.



கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசுகையில் அனைத்து இயக்கங்களையும், அரசியல் கட்சிகளையும் ஒருங்கிணைத்து தமிழர் திருநாள் பொங்கல் விழாவை எழுச்சியுடன் நடத்தி வந்தவர். பத்ரியின் நினைவு நாளில் தோழர்கள் இன்றைய தலைமுறையினரை திராவிடர் இயக்கம் நோக்கி அணிதிரட்ட சூளுரைத்தனர்.

ஆர்.என் துரை (திமுக மாவட்டத் துணை.செயலாளர்), க.வே மோகன் (வட்டச் செயலாளர் திமுக) ,லைனர் பிரபு (வட்டச் செயலாளர்), வெங்கடேஷ் (மாவட்டச் செயலாளர் விசிக), மதன் (விசிக) ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினர். தோழர்கள் தபசி குமரன் (தலைமை நிலையச் செயலாளர்), அன்பு தனசேகர் (தலைமைக் குழு உறுப்பினர்), இராவணன் (மாவட்டத் துணைச் செயலாளர்), மாவட்ட அமைப்பாளர்கள் எட்வின் பிரபாகரன், தட்சணா மூர்த்தி, ஜெயபிரகாஷ் (இளைஞரணி ஒருங்கிணைப்பாளர்), அருண் (இளைஞரணி அமைப்பாளர்), பிரகாசு (நிமிர்வோம் வாசகர் வட்ட ஒருங்கிணைப்பாளர்), திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில்ராசு, மடத்துகுளம் ஒன்றிய தலைவர் சிவானந்தம், சங்கீதா, திருவல்லிக்கேணி பகுதி பொறுப்பாளர்கள் கோபிநாத் (பகுதி தலைவர்), ராஜேஷ் (பகுதி செயலாளர்), சூர்யா (பகுதி அமைப்பாளர்), தோழர்கள் இரண்யா, அசோக், மயிலை சிவா, பிரவீன், மாரி (திக), மகிழவன், லட்சுமணன், குறளரசி, பிரபாகரன் (சேலம் இளைஞரணி), கவியரசு( தமிழ்நாடு மாணவர் கழகம் சேலம்), மயிலை அருண், வீரா, பிரகாஷ் மாஸ்டர், ப்ரித்தி, ஏசு, அஸ்வின், மேட்டூர் முத்துராஜ், மோகன், ஜேம்ஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## விடைபெற்ற தேனிசை செல்லப்பாவுக்கு கழகம் இறுதிமரியாதை!



மறைந்த பெரியார் தொண்டர் பாடகர் தேனிசை செல்லப்பா அவர்களுக்கு, ஏப்ரல்-28 மாலை 7 மணிக்கு, கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பேராசிரியர் சரசுவதி ஆகியோருடன், கழகத் தோழர்கள் இறுதி மரியாதை செய்தனர்.

# அம்பேத்கர் சிலைக்கு கழகம் மரியாதை!



**கடலூர்:** ஏப்ரல்-14 புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளில் கடலூர் மாவட்டக் கழகத்தின் சார்பாக கடலூர் மஞ்ச குப்பத்தில் புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு பெரியார் சிவா தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். சென்னை மாவட்டச் செயலாளர் உமாபதி, ராஜேந்திரன், திராவிட மகிழன், சத்யா, சதீஷ், திருமூர்த்தி, அசோக், வீரா, அறிவழகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**நங்கவள்ளி:** ஒன்றிய கழகத்தின் சார்பில் புரட்சியாளர் அம்பேத்கர் 135 வது பிறந்தநாளையொட்டி ஏப்ரல்-14 காலை 11.00 மணியளவில் நங்கவள்ளியில், சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன் தலைமையில் நங்கவள்ளி பேருந்து நிலையத்தில் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து முழக்கம் எழுப்பப்பட்டது. நங்கவள்ளி நகரச் செயலாளர் சந்திரசேகரன், சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தங்கதுரை, சேலம் மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர் பிரபாகரன், தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் கவியரசு, நங்கவள்ளி பகுதி புகழேந்தி, பிரபாகரன், ஹரி, தினேஷ், சித்திக் உள்ளிட்ட தோழர்கள் கலந்துகொண்டனர்.

**சென்னை:** ஏப்ரல் 14, காலை 9 மணிக்கு அடையாறு அம்பேத்கர் மணிமண்டபம், பெரிய மேடு, மந்தைவெளி ஆகிய இடங்களில் உள்ள அம்பேத்கர் சிலைகளுக்கு தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் தலைமையில் தோழர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

மாவட்டத் தலைவர்கள் மா. வேழவேந்தன், சேத்துப்பட்டு இராசேந்திரன், மாவட்ட அமைப்பாளர்கள் ம.கி. எட்வின் பிரபாகரன், ந. தட்சிணாமூர்த்தி, மாவட்டத் துணைச் செயலாளர் இராவணன், சுகுமார், பிரகாஷ் மாஸ்டர், அனிதா மணிரத்னம், சு. கோபிநாத் (திருவல்லிக்கேணி பகுதி தலைவர்), மயிலை மனோகர், சிவா, தேன்மொழி, மனோஜ், எழிலரசன், காயத்ரி, லட்சுமணன், ப்ரவீன் aks, பாரி சிவா, தினகரன், பிரீத்தி, உதயகுமார், அஸ்வின், பிரனேஷ், மஞ்சுநாதன், பிரபாகரன், ஜெயந்தி, ஜேம்ஸ், தினியா, சஞ்சய், குறளரசி, ஆர்த்தி, நஜ்முனிஷா, அகராதி, இயல் உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர்.



**ஈரோடு:** தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் புரட்சியாளர் அம்பேத்கரின் பிறந்த நாளை முன்னிட்டு ஏப்ரல்-14 அன்று காலை படத்திற்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டது. மாவட்டத் தலைவர் செல்வராஜ் மற்றும் தோழமை இயக்கத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**திருப்பூர்:** மாவட்டக் கழகத்தின் சார்பில் ஏப்ரல்-14 அன்று காலை 09.30 மணியளவில் புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்தநாள் திருப்பூர் மாநகராட்சி அலுவலகம் எதிரில் அம்பேத்கர் சிலைக்கு கழகப் பொருளாளர் துரைசாமி தலைமையில் மாவட்டத் தலைவர் முகில் ராசு முன்னிலையில் அம்பேத்கரின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. மாவட்ட அமைப்பாளர் சங்கீதா கொள்கை முழக்கங்களை எழுப்பினார்கள். அண்ணல் அம்பேத்கர் அவர்கள் குறித்தும் அவர் ஆற்றியபணி குறித்தும் இனி நாம் மேற்கொள்ளவிருக்கும் செயல்பாடுகள் குறித்து கழகத்தின் மாவட்டத் தலைவர் முகில் ராசு உரையாற்றினார். நிறைவாக கழகப் பொருளாளர் துரைசாமி நிறைவுரையாற்றினார். தமிழ்நாடு மாணவர் கழக யாழினி சமத்துவ நாள் உறுதிமொழியினை கூற உறுதி மொழி ஏற்பு நிகழ்வு நடைபெற்றது. கழகத் தோழர் இனியன் நன்றியுரையாற்றினார். மாநகரத் தலைவர் தனபால், மாநகர செயலாளர் மாதவன், தெற்கு பகுதி பொறுப்பாளர் ராமசாமி, வடக்கு ஒன்றிய அமைப்பாளர் அய்யப்பன், ராஜ்குமார், குணா, கருணாநிதி, மார்க்சிய முற்போக்கு அமைப்பு தமிழமுதன், சரசுவதி, யாழினி உள்ளிட்ட கழகத் தோழர்கள் திரளாக கலந்து கொண்டார்.



**கோவை:** புரட்சியாளர் அம்பேத்கரின் 135 வது பிறந்தநாளையொட்டி கோவை மாவட்டக் கழகம் சார்ப்பில் வடகோவை உணவுகிடங்கில் உள்ள சிலைக்கு மாநகர துணைத் தலைவர் சத்தியமூர்த்தி தலைமையில் மாலை அணிவித்து புகழ் வணக்கம் செலுத்தப்பட்டது. நிர்மல்குமார், வெங்கட், கிருஷ்ணன், நிலவழகன், சத்தியமூர்த்தி, தரணி, கதிரவன், நவீன் கலந்து கொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : May 07, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran